FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318746

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **06/2026** Date: நாள் **19.06.2026**

2. (i) Act சட்டம்: **PC Act 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 and 12**

(ii) Act சட்டம்: **B.N.S.S Act** Sections பிரிவுகள்: **r/w 106**

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 18.06.2026** Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு **Before 12.00 hrs** Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **19.06.2026** Time : நேரம் **15.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **19.06.2026** Time : நேரம் **15.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **Regional Transport Office, Thoothukudi. 4 Kms North East**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.S.Balamurugan** (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் **Tr.K.Shenbagampillai**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

(d) Nationality : நாட்டினம் **இந்தியன்**

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Deputy Tahsildar

(g) Address : முகவரி Election, Thoothukudi Municipal Corporation, Thoothukudi District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.Tr.Rajendrankumar, aged 49/2026, S/o Tr.K.Thangavel, Personal Assistant to RTO, i/c Regional Transport Officer, Thoothukudi, Thoothukudi district and 6 anothers.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11 Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed V.Amalakshmi Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19.6.26 19.6.2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court **19.06.2026 at 17.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் **S. PETER PAUL DURAI**
Rank: நிலை ..... No. எண் .....

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.06/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tr.T.Rajendrakumar, aged 49/2026, S/o Tr.K.Thangavel, Personal Assistant to RTO, i/c Regional Transport Officer, Regional Transport Officer, Thoothukudi, Thoothukudi District. **Private individuals :** 2. Tr.J.Issac Jeyaseelan, aged 62/2026, S/o Tr.John Sargunam, No.116/1B, Sankar Colony, 2nd Street, 3rd Mile, Thoothukudi. 3. Tr.P.Periyasamy, aged 51/2026, S/o Tr.Petchimuthu, Rajagopal Nagar West, 4th Street, Millerpuram, Thoothukudi. 4. Tr.P.Santhanaraj, aged 52/2026, S/o Tr.Patturaj, 7th Street, Sundaravelpuram Thoothukudi. 5. Tr.A.Chandran, aged 38/2026, S/o Tr.Ainthuvitaan, No.3/180, North Street, Periyanayagipuram, Thoothukudi. 6. Tr.K.Jeyaraj, aged 52/2026, S/o Tr.Karuppasamy, No.187/100-D/41, Burma Colony, Millerpuram, Thoothukudi. 7. Tr.P.Patturaj, aged 54/2026, S/o Tr.S.Perumal, Old E.B.Office Road & New Sub Registrar Office Road, Pudukottai, Thoothukudi district.	தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அலுவலக பணியாளர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு புதிப்பித்தல், தகுதிச்சான்று வழங்குதல், வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 18.06.2026 -ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 15.30 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.செ.பாலமுருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.செ.பாலமுருகன் அவர்கள்

கொடுத்த புகார் மனுவை 19.06.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது பிற்பகல் 15.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 06/2026, பிரிவு 7 & 12 of PC Act 1988 as Amended in 2018 r/w 106 B.N.S.S Act –ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : திரு.செ.பாலமுருகன், துணை வட்டாட்சியர் (தேர்தல்), தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் பின்புறம் அமைந்துள்ள தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.ஜெ.அனிதா மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 18.06.2026-ம் தேதி மதியம் 11.30 முதல் 12.00 மணி வரை கண்காணித்ததில் தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்கள் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலக பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இருந்து அங்கு வரும் பொதுமக்களிடம் புதிய வாகன பதிவு, வாகனப் பதிவு புதிப்பித்தல், தகுதிச்சான்று வழங்குதல், வாகன ஓட்டுநர் உரிமம் வழங்குதல், வாகன உரிமம் புதுப்பித்தல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு இடைத்தரகர்கள் மூலமாகவும் நேரிடையாகவும் லஞ்சம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 18.06.2026-ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 15.30 மணி வரை மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தின் காம்பவுண்ட் மெயின் கேட் அருகே முகம் தெரியாத நபர் ஒருவர் கத்தையாக பணத்தை கீழே போட்டு விட்டு ஓடி விட்டார். அந்தப் பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.38,000.-/- இருந்தது. அந்தப் பணம் **ரூ.38,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் திடீர் தணிக்கையின் போது வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க ஜசக் டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் சோரீஸ்புரத்தில் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வரும் திரு.J.ஜசக் ஜெயசீலன் என்பவரை சோதனை செய்த போது அவரின்

சட்டைப்பையினுள் காணப்பட்ட செல்போன் கவருக்குள் தனியாக வைத்திருந்த ரூ.1,700/- குறித்து உரிய விளக்கம் கேட்டபோது சரியாக விளக்கம் அளிக்காததினால் வட்டாரப் போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.1,700/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க தூத்துக்குடி 3-ம் மைல் அமைந்துள்ள ஸ்ரீநிதி கேப்பிட்டல் பைனான்ஸ் கம்பெனியில் பியூனாக வேலை பார்த்து, அந்த கம்பெனியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளையும் கவனித்து வரும் திரு.P.பெரியசாமி என்பவரை சோதனை செய்த போது அவரின் பேண்ட் டிக்கி பாக்கெட்டினுள் வைத்திருந்த பணம் ரூ.1,500/- குறித்து உரிய விளக்கம் கேட்டபோது சரியாக விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.1,500/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த தூத்துக்குடி அருள்ராஜ் மருத்துவமனைக்கு எதிரில் அமைந்துள்ள ரம்யா பைனான்ஸ் கம்பெனியில் கலெக்ஷன் ஏஜெண்டாகவும், அந்த கம்பெனியில் கம்பெனி வாகனங்கள் சம்பந்தமாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து பணிகளையும் கவனித்து வரும் திரு.P.சந்தனராஜ் என்பவரை சோதனை செய்த போது அவரின் இடது பக்க பேண்ட் பாக்கெட்டினுள் வைத்திருந்த பணம் ரூ.2,000/- குறித்து உரிய விளக்கம் கேட்டபோது சரியாக விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.2,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த சந்திரன் டிரைவிங் ஸ்கூல் என்ற பெயரில் அய்யனடைப்பில் டிரைவிங் ஸ்கூல் நடத்தி வரும் திரு.A.சந்திரன் என்பவரை சோதனை செய்த போது அவரின் சட்டைப்பையினுள் வைத்திருந்த பணம் ரூ.5,100/- குறித்து உரிய விளக்கம் கேட்டபோது சரியாக விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.5,100/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த எட்டயபுரம் ரோட்டில் அமைந்துள்ள ஜான் கென்னடி டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் டிரான்ஸ்போர்ட் பிரிவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட பணிகளை கவனித்து வரும் திரு.K.ஜெயராஜ் என்பவரை சோதனை

செய்த போது அவரின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டினுள் வைத்திருந்த பணம் ரூ.2,600/- குறித்து உரிய விளக்கம் கேட்டபோது சரியாக விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.2,600/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த சுப்புலெட்சுமி டிரைவிங் ஸ்கூலில் பயிற்சியாளராக பணிபுரிந்து வரும் திரு.P.பட்டுராஜ் என்பவரை சோதனை செய்த போது அவரின் சட்டை பாக்கெட்டினுள் வைத்திருந்த பணம் ரூ.6,000/- குறித்து உரிய விளக்கம் அளிக்காததினால் அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேற்படி பணம் **ரூ.6,000/-** விசாரணைக்காக செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது மொத்தம் (ரூ.38,000/- + ரூ.1,700/- + ரூ.1,500/- + ரூ.2,000/- + ரூ.5,100/- + ரூ.2,600/- + ரூ.6,000/- =) **ரூ.56,900/-** ஆனது நேற்று 18.06.2026-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணி முதல் 15.30 மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது தூத்துக்குடி வட்டார போக்குவரத்து அலுவலக ஊழியர்களுக்கான பணம் கையிருப்பு பதிவேடு-2026, அலுவலக வருகைப் பதிவேடு-2026 மற்றும் அலுவலக நடமாட்டப் பதிவேடு-2026 ஆகியவை செயல்முறைகள் மூலம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திடீர் தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் மற்ற ஊழியர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்ட போது அவர்கள் அளித்த விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்ததால் அந்த பணம் செயல்முறைகள் மூலம் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.56,900/- மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.ராஜேந்திரகுமார் மற்றும் தனிநபர்களான திரு.J.ஐசக் ஜெயசீலன், திரு.P.பெரியசாமி, திரு.P.சந்தனராஜ், திரு.A.சந்திரன், திரு.K.ஜெயராஜ், திரு.P.பட்டுராஜ் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 19.06.2026 (செ.பாலமுருகன்), துணை வட்டாட்சியர் (தேர்தல்), தூத்துக்குடி மாநகராட்சி, தூத்துக்குடி. Sir, Received the complaint on today (19.06.2026) at 15.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.06/2026, U/s 7 & 12 of PC Act, 1988 as Amended in 2018 r/w 106 B.N.S.S Act. Sd/- 19.06.2026, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police,

V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.செ.பாலமுருகன் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.V.அன்னலெட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

19.6.2026

(S. PETER PAUL DURAI)

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi